# நிகவெரட்டி பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நிகவெரட்டி பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகவெரட்டி பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி, வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 9,000,000 தொகை அதிகமாகவும் ஆண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவையும்

அதே பெறுமானத்தினால் அதிகரித்தும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் நிர்மாணக் கடன் கொடுத்தோருக்காக முன்னைய ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட ஏற்பாட்டில் கடன் கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்டு எஞ்சிய ரூபா 7,397,286 திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக நாட்குறிப்பு 53 இனால் மூலதனச் செலவினக் கணக்கில் (செலவினத் தலைப்பு 309) செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 7,397,286 தொகையினால் குறைத்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 41,084,703 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,910,732 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,488,289 ஆக இருந்தது.

### 2.2. நிதிக் கட்டுப்பாடு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி, நிருவாகம்) விதிக் கோவையின் 14 ஆவது விதியின் பிரகாரம் ஏதாவது செலவின விடயத்திற்கான ஏற்பாடு போதியளவானதாக இல்லாதவிடத்து செலவின மாற்றங்களின் கீழ் அல்லது குறைநிரப்பின் கீழ் ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டில் 10 செலவின விடயங்களில் ரூபா 234,991 தொகையான மிகைச் செலவினமும் 43 செலவின விடயங்களில் ரூபா 2,559,781 தொகையான நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,016 | 1,134 | 1,072 |
| (ii) | வாடகை | 6,672 | 6,787 | 10 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 434 | 434 | 16 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,000 | 11,566 | 12,061 |

### 2.3.2 ஆதன வரி

மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 1,061,208 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் 33-42 ஆம் விதிகளில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் காலரீதியாக நிலுவைப் பட்டியல் தயாரிப்பதற்கோ அல்லது பிடியாணை பிறப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 59 ஆவது விதியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டில் 915 வியாபார நிலையங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் 643 வியாபார நிலையங்களுக்காக மாத்திரம் வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் களப் பரிசோதனை மூலம் மற்றைய நிலையங்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த வாடகை (குறுகிய கால) ரூபா 219,523 தொகை மற்றும் நிலுவையாக இருந்த வாடகை (நீண்ட கால) ரூபா 417,814 தொகை என்பன காணப்பட்டதுடன் நீண்ட காலமாக நிலுவையாக இருந்த வாடகைகளில் ரூபா 308,777 தொகையானது 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.3.5 இறைச்சி மற்றும் மீன் கடை வாடகை**

மில்லகொட நன்னீர் மீன் கடை மற்றும் கலபிட்டியாகம கடல் மீன் கடை என்பவற்றை மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு விடும் போது உரிய பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டில் ரூபா 200,200 இற்கு கேள்வி கோரப்பட்ட இந்த மீன் கடையிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 57,500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு காலத்தில் இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளில் 10 சந்தர்ப்பங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 483,380 தொகையான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிகவெரட்டிய வாராந்த சந்தை 1999 ஆம் ஆண்டில் வாடகைக்கு விடும் வகையில் 02 கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு கேள்விப் பத்திரம் திறக்கப்படாமையினால் அந்தக் கேள்வியைச் சமர்ப்பித்தவரினால் மாகோ மாவட்ட நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 4864/எல் ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நட்டமாக ரூபா 80,000 மற்றும் வழக்குக் கட்டணமாக ரூபா 10,000 என ரூபா 90,000 தொகையானது 2011 செப்தெம்பர் 07 ஆந் திகதி சபை நிதியத்திலிருந்து முறைப்பாட்டாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 மனித வள முகாமைத்துவம்**

சபையில் பின்வரும் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

| புதவி | எண்ணிக்கை |
|---|---|
| செயலாளர் | 1 |
| வருமானக் கட்டுப்பாட்டாளர் | 2 |
| நூலகர் | 1 |

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

2010 இன் மாகாணக் குறித்த அபிவிருத்தி மானிய விசேட செயற்திட்டத்தின் கீழ் வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் கெலேகம தேசிய நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 3,400,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் சகல வேலை விடயங்களினதும் பற்றுச்சீட்டுக்களையும் மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்குமாறும் ஆண்டின் போது செலுத்த முடியாதிருந்த வேலைகள் எதிர் வரும் ஆண்டின் தொடர் வேலை விடயத்திற்கான அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையில் இந்த வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி, நிருவாகம்) விதிக் கோவையின் 218 ஆம் இலக்க விதியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறதியில் அந்த நிதியத்திற்குச் செலுத் வேண்டிய மீதி ரூபா 3,554,669 ஆகக் காணப்பட்டது.

(இ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

நிகவெரட்டிய நகரத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அகற்றுவதற்காக போகொல்லாகம பிரதேசத்தில் சபைக்கு கையளிக்கப்பட்ட காணியில் ரூபா 3,098,427 தொகை செலவில் கூட்டுப் பசளைப் பிரிவு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த இடத்திற்கு குப்பைகளை அகற்றுவதற்கு முடியுமாக இருந்த போதும் தனியார் காணிகளின் குழிகளை நிரப்பிப் போடுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 148,400 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்